# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்

## Tamilnadu Government Employees' Association

பதிவு எண் 237/84

**தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்**

எண். 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600 005.

✆ 28441286 / 28440938 பேக்ஸ் : 28443601 e-mail : tngeastatecenter@gmail.com

மாநிலத் தலைவர்
**மு.அன்பரசு**

பொதுச் செயலாளர்
**ஆ.செல்வம்**

மாநில துணைத் தலைவர்கள்
**மொ.ஞானத்தம்பி**
**ஏ.பெரியசாமி**
**இரா.மங்களபாண்டியன்**
**என்.வெங்கடேசன்**
**மு.சீனிவாசன்**
**கோ.பழனியம்மாள்**

மாநிலச் செயலாளர்கள்
**சி.ஆர்.இராஜகுமார்**
**இரா.ந.நம்பிராஜன்**
**சி.எஸ்.கிறிஸ்டோபர்**
**சி.பரமேஸ்வரி**
**உ.சண்முகம்**
**தெ.வாசுகி**

மாநிலப் பொருளாளர்
**மு.பாஸ்கரன்**


ஊடக செய்தி 6 / 2020

நாள் : 24.04.2020

**தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் மு.அன்பரசு மற்றும் பொதுச் செயலாளர் ஆ.செல்வம் ஆகியோர் இணைந்து வெளியிடும் ஊடகச் செய்தி**

# கொரோனா காலத்திலும் அரசு ஊழியர்கள் மீதான பழிவாங்கும் நடவடிக்கைகள் தொடர்வது துரதிருஷ்டவசமானது!

## நடவடிக்கைகளை திரும்பப் பெற வேண்டுகோள்!

## தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் கோரிக்கையை ஏற்று ரூ.50 லட்சம் நிதியுதவி அளிக்க உத்தரவிட்ட தமிழக முதல்வருக்கு நன்றி

## மே 3க்குப் பிறகு தமிழக அரசின் ஏழைகளுக்கான செயல் திட்டம் என்ன? அரசு இப்போதே தெளிவுபடுத்திவிட வேண்டியது அவசியம்!

## தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வலியுறுத்தல்!

### தமிழக அரசின் ஏழைகளுக்கான செயல் திட்டம் என்ன?

கொரோனா பாதிப்பினால் உலகமே செய்வதறியாது திகைத்து நிற்கும் நிலையில் இந்தியாவில் மற்ற நாடுகளை ஒப்பீடு செய்யும் போது இந்த கொரோனா கட்டுக்குள் இருக்கிறது என்றும் இந்தியாவில் தமிழகத்தில் இறப்பு விகிதமும், குணமடைந்து வீடு செல்வோர் விகிதமும் மற்ற மாநிலங்களை ஒப்பிடும்போது சிறப்பாகவே உள்ளது என்றும் மாண்புமிகு முதலமைச்சரும், பிற அமைச்சர்களும் கூறிவருவது நல்ல செய்திகளே என்றாலும் இரண்டாவது கட்ட 19 நாள் ஊரடங்கு காலத்தில் பாதி நாட்கள் கடந்து விட்ட நிலையில் மீதமுள்ள நாட்களில் என்ன நடக்கும் என்ற

கேள்வியும், மே 3ஆம் தேதிக்குப் பிறகு அரசு என்ன முடிவு எடுக்கும் என்ற எதிர்பார்ப்புமே மக்களிடம் தற்போது மேலோங்கியுள்ளது. மே 3ஆம் தேதிக்குள் கொரோனா தொற்று முற்றிலும் தடுக்கப்பட்டுவிட வாய்ப்புகள் இல்லாதபட்சத்தில் அரசாங்கம் மே 3ஆம் தேதிக்கு பிறகு செய்ய வேண்டிய முன்னேற்பாடுகளை இப்போதே திட்டமிட வேண்டியது அவசியமாகும். ஒருவேளை முழுமையாக ஊரடங்கு தளர்த்தப்படுமானால் எந்த நிபந்தனைகளுடன் தளர்த்தப்படும் என்பது குறித்தும், அல்லது தளர்த்தப்படாமையோ, பகுதியான தளர்த்தலோ நடைமுறைக்கு வருமானால் ஊரடங்கு தளர்த்தப்படாத பகுதிகளில் உள்ள மக்களின் வாழ்வாதாரத்திற்கு அரசு என்ன செய்யப்போகிறது என்பதையும் பொதுமக்களுக்கு முன்கூட்டியே விளக்கிவிட வேண்டிய அவசியம் மத்திய மாநில அரசுகளுக்கு உள்ளது.

ஏழை, நடுத்தர மற்றும் பாட்டாளி மக்களின் வாழ்க்கை கடந்த நாற்பது நாட்களாக ஊரடங்கு என்ற பிரஷர் குக்கரினால் அழுத்தப்பட்டிருக்கும் நிலையில் ஏப்ரல் இறுதி வாரம் என்பது மிக முக்கியம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது. பிரஷர் குக்கரில் ஏற்றப்பட்டுக் கொண்டிருக்கும் வெப்பத்தினால் குக்கர் விசிலடிக்க ஆரம்பித்தபின் இதற்கான வழிகளை ஆராய்வதோ, தேடுவதோ இந்த பிரச்னையை பெரிதாக வெடிக்கச் செய்துவிடும் என்பதுதான் நிதர்சனம். கை தட்டச் சொன்னீர்கள் தட்டினோம். விளக்கேற்றச் சொன்னீர்கள் ஏற்றினோம். சமூக இடைவெளி காத்து வீட்டிற்குள் இருந்து ஊரடங்கை கடைபிடியுங்கள் என்றீர்கள். அதையும் தாக்குப்பிடித்து, எங்கள் வாழ்வாதாரத்தை இழந்து அரசாங்கம் எங்களை கைவிட்டுவிடாது என்ற நம்பிக்கையில் இருந்துவிட்டோம். இதுவரை அரசாங்கம் சொன்னவற்றையெல்லாம் நாங்கள் செய்துவிட்டோம். இப்போது அரசாங்கம் எங்களுக்குச் என்ன செய்யப்போகிறது என்ற கேள்வி அடுத்த வாரத்தில் விஸ்வரூபம் எடுக்கும். அதற்குமுன் தமிழக அரசு உடனடியாக விழித்துக் கொள்ளாவிட்டால் பேராபத்தை நோக்கி இந்த சமூகம் நகரும் நிலை ஏற்படலாம் என இப்போதே அரசியல் விமர்சகர்களும் பொருளாதார வல்லுநர்களும் சொல்கிறார்கள்.

இன்னொரு 21 நாள் ஊரடங்கு தமிழகத்தில் சாத்தியமா? என்பதும் அப்படி சாத்தியப்பட வேண்டுமானால் இங்குள்ள ஏழை எளிய நடுத்தர குடும்பதாரர்களின் கைகளில் ரூ.5000/-மாவது ரொக்கமாக வழங்கப்படுவதும் குடிமைப் பொருட்களை இலவசமாக வழங்கப்பட வேண்டும் என்ற யதார்த்த நிலையை ஏற்றுக்கொண்டு அரசு இன்னொரு ஊரடங்கிற்கு திட்டமிடுவது அவசியமாகும். இவற்றில் தமிழக அரசு அடுத்த மாதத்திற்கான ரேஷன் பொருட்களை இலவசமாக வழங்கிடுவதாக அறிவித்துள்ள நிலையில் ரொக்கத்தொகைக்கான ஏற்பாடுகளை இப்போதிருந்தே மேற்கொள்ள வேண்டும். ரூ.5000/- முடியாத தொகையாக இருந்தால் ரூ.4000/- அல்லது ரூ.3000/- போன்ற குறைந்தபட்சத் தொகைகளைத் தருவதாக இப்போதே அறிவித்தால்தான் பொதுமக்கள் அடுத்த ஊரடங்கிற்கு மனதளவில் இப்போதிருந்தே தயாராவார்கள். அத்தகைய ஊரடங்கும் அர்த்தமுள்ளதாக இருக்கும்..

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84
தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்
எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601

மே 3ஆம் தேதிக்கு ஊரடங்கு தளர்த்தப்படுவது என்பது இதுவரையிலான தரவுகளின் அடிப்படையில் இன்றைய சூழ்நிலையில் அபாயகரமானதாக தெரியும் நிலையில் முழுமையான அல்லது பகுதியான தளர்வுகள் மிகுந்த எச்சரிக்கையோடு கையாளப்பட வேண்டிய விஷயங்களாக மே 3ஆம் தேதிக்குப் பின்னர் இருக்கும். ஊரடங்கை தளர்த்திவிட்டு, சமூக இடைவெளி பேணுதல், முகக் கவசம் அணிதல் போன்ற நிபந்தனைகளை மிகக் கடுமையாக செயல்படுத்துவதிலும், பேருந்து நிறுத்தங்களில் நிற்கும் மக்களும், அரசுப் பேருந்துகளில் செல்லும் பயணிகளும், பொது இடங்களில் மக்களும் எப்படிப்பட்ட சமூக இடைவெளியை கடைபிடிக்க வேண்டும் என்பன போன்ற விழிப்புணர்வை அரசு மக்களிடம் இப்போதிருந்தே ஏற்படுத்த வேண்டும். அது மட்டுமல்ல, அதை மிகக் கடுமையாக செயல்படுத்த வேண்டும். அவ்வாறில்லாமல் இவையெல்லாம் மக்களின் பிரச்னைகள் என்று அரசாங்கம் வாளாயமாக இருந்துவிட்டால் அதற்கான உயர்ந்தபட்ச விலைகளை அமெரிக்காவைப் போல், இத்தாலியைப்போல், சிங்கப்பூரைப் போல் நாமும் தரவேண்டியதிருக்கும். அதனால் தமிழக அரசு தன்னுடைய ஆக்ஷன் பிளானை மே 3ஆம் தேதி வரைக்கும் காத்திராமல் இப்போதே அது குறித்து மக்களிடம் தெரிவித்து மக்களை தயார்படுத்துவது நல்லது.

**தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் கோரிக்கையை ஏற்று உத்தரவிட்ட மாண்புமிகு தமிழக முதல்வருக்கு நன்றி!**

கொரோனா நோய்த் தொற்று தடுப்பு நடவடிக்கைளில் ஈடுபடும் மத்திய அரசு ஊழியர்களுக்கு தலா ரு.50 லட்சம் வீதம் மத்திய அரசு காப்பீடு செய்துள்ளதை சுட்டிக்காட்டி தமிழகத்தில் கொரோனா தொற்று தடுப்புப் பணியில் ஈடுபட்டுள்ள அனைத்து அரசு மருத்துவர்கள் முதல் தூய்மைப் பணியாளர்கள் வரையிலானவர்களில் யாருக்கேனும் பாதிப்போ உயிரிழப்போ ஏற்பட்டால் அவர்தம் குடும்பத்திற்கு ரூ.50 லட்சம் வழங்கிட வேண்டும் என்று தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் 14.4.2020 அன்று கோரிக்கை வைக்கப்பட்டிருந்தது. தமிழக அரசு அத்தகைய காப்பீட்டுத் திட்டத்தை ரூ.10 லட்சத்திற்கு அதுவும் மருத்துவர்களுக்கு மட்டுமே ஏற்படுத்தியிருப்பதாக தெரிவித்திருப்பது அறம் சார்ந்த செயலாக தெரியவில்லை என்றும் எடுத்துக்கூறப்பட்டிருந்தது.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் கோரிக்கையை ஏற்று முதல்வர் அவர்கள் 22.4.2020 அன்று “போர்க்காலப் பணியில் ஈடுபட்டுள்ள அரசுத் துறைகளான மருத்துவத்துறை, காவல்துறை, உள்ளாட்சித்துறை மற்றும் தூய்மைப் பணியாளர்கள் உள்ளிட்ட அனைத்துத் துறை ஊழியர்களும் கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு நோய்த் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழக்க நேரிட்டால் ரூ.50 லட்சம் நிதிஉதவியும், இறந்தவரின் குடும்ப உறுப்பினர் ஒருவருக்குத் தகுதியின் அடிப்படையில் அரசுப் பணியும் வழங்கப்படும்” என அறிக்கை வெளியிட்டுள்ளார். அதற்கு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தன்னுடைய மனமார்ந்து நன்றியை தமிழக முதல்வருக்குத்

தெரிவித்துக் கொள்கிறது. இதன் மூலம் கொரோனா தொற்று தடுப்புப் பணியில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு அரசு ஊழியரும் காவல் துறையினரும் இன்னும் உத்வேகத்துடனும், விழிப்புடனும் செயல்பட்டு கொரோனா தொற்றை தடுக்கும் நடவடிக்கைகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வார்கள் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

**மருத்துவர்கள், செவிலியர்கள் உட்பட கொரோனா தடுப்புப் பணியில் ஈடுபட்டுள்ள முன்கள ஊழியர்கள் அனைவருக்கும் பாதுகாப்பு உபகரணங்களை வழங்குதில் அரசு சுணக்கமோ பாகுபாடோ காட்டக்கூடாது!**

கொரோனா நோய்த் தொற்றை மட்டுப்படுத்துவதிலும், நோயாளிகளை குணப்படுத்துவதிலும், ரத்த மாதிரிகளை எடுத்து சோதனைக்கு அனுப்புவதிலும், சோதனைகள் மேற்கொள்வதிலும், சோதனைகளின் முடிவுகளின் பேரில் நோய்த்தொற்று தாக்கப்பட்ட நபருடன் இருந்த வசித்த நபர்களை கண்டுபிடித்து தனிமைப்படுத்துவதிலும், அவர்களை வீட்டிலோ அல்லது தனியிடத்திலோ தங்கவைத்து சமூக விலகலைக் கடைபிடித்து பாதுகாப்பதிலும் மருத்துவர்கள், செவிலியர்கள், தூய்மைப் பணியாளர்கள், மருத்துவப் பணியாளர்கள், மருத்துவ தொழில்நுட்ப அலுவலர்கள், ஆய்வக தொழில்நுட்புனர்கள், மருந்தாளுனர்கள், பொது சுகாதாரத்துறையில் பணிபுரியும் அனைத்து ஊழியர்கள் குறிப்பாக கிராம சுகாதார செவிலியர்கள், ரத்தம் சேகரிப்பாளர்கள், மருத்துவமனை பராமரிப்பாளர்கள், ஆம்புலன்ஸ் ஓட்டுநர்கள், காவல்துறையினர், தீயணைப்புத் துறையினர், வருவாய்த் துறை ஊழியர்கள், ஊரக வளர்ச்சித்துறை ஊழியர்கள், அங்கன்வாடி ஊழியர்கள், சத்துணவு மற்றும் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி ஊழியர்கள், சமூகநலத்துறை, கூட்டுறவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை, வேளாண் துறை உள்ளிட்ட இன்னபிற அத்தியாவசியத் துறை ஊழியர்கள் தங்களின் அயராத பங்களிப்பை வழங்கிக் கொண்டிருக்கும் இக்கட்டான இத்தருவாயில் அவர்களுக்கு போதுமான பாதுகாப்பு உபகரணங்கள் கையுறைகள், முகக் கவசங்கள் வழங்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டுகள் தொடர்ந்து எழுப்பப்பட்டு வருகின்றன.

குறிப்பாக கொரோனா நோயாளியை பரிசோதிக்கும் மருத்துவர் மற்றும் செவிலியர்களுக்கு தேவையான பாதுகாப்பு உடைகள் கையுறைகள் முகக் கவசங்கள் போன்றவற்றை வழங்குவதில் அரசின் மெத்தனம் மருத்துவர்களையே நோயாளிகளாக்கி விடும் நிலைக்கு கொண்டு சென்றுவிடும் என்பதை அரசு உணர வேண்டும். ஊடகங்களில் தேவைக்கும் மேலே பாதுகாப்பு உடைகளும் உறைகளும், கவசங்களும் உள்ளதாக அரசு கூறிவரும் நிலையில் மருத்துவர்கள் தங்களுக்கான பாதுகாப்பு உடைகளை வழங்குவதில் அரசு கவனம் கொள்ளவில்லை என்று கறுப்புப் பட்டை அணிந்து கண்டனம் தெரிவித்து வரும் காட்சிகள் அரசின் நம்பகத் தன்மையை, அதாவது பாதுகாப்பு உபகரணங்கள் அனைத்தும் தேவைக்கு அதிகமாகவே உள்ளதாக கூறிக்கொள்ளும்

கூற்றை பொய்யாக்கியுள்ளன. தற்போதுள்ள இக்கட்டான சூழ்நிலையில் மருத்துவர்கள் ஆரோக்கியத்துடன் இருந்தால்தான் அவர்கள் பொதுமக்களுக்கு மருத்துவ சேவை செய்ய முடியும் என்பதை உணர்ந்து அவர்களுக்கான பாதுகாப்பு உபகரணங்களை வழங்கி அவர்கள் அச்சமின்றி தங்கள் மருத்துவ சேவைகளை பொதுமக்களுக்கு செய்திட தமிழக அரசு ஆவன செய்ய வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கனிவுடன் வலியுறுத்துகிறது.

**தங்குவதற்கு தனிமைப்படுத்தப்பட்ட இடமும், உண்ண ஆரோக்கியமான உணவும் உறுதிப்படுத்தப்பட வேண்டும், மருத்துவர்களுக்கும் செவிலியர்களுக்கும் மற்ற ஊழியர்களுக்கும்!**

தொடர்ச்சியான வேலைகளினால் மன உளைச்சலுக்கும், சோர்வுக்கும் ஆளாகியுள்ள மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் மருத்துவமனைகளில் பணிபுரியும் ஊழியர்களுக்கு குறிப்பிட்ட கால இடைவெளியில் தனிமைப்படுத்தப்பட்ட ஓய்வும், மருத்துவமனைகளில் பணிமுடித்து அங்கேயே தங்க நேரும் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுக்கு அவர்கள் தங்களை தனிமைப்படுத்திக்கொண்டு தங்குவதற்கும், அவர்களுக்கு தரமான உணவு அளிப்பதற்கும் அரசாங்கம் உத்தரவாதம் ஏற்படுத்தித் தர வேண்டும். கொரோனா தடுப்பு பணியில் ஈடுபட்டுள்ள அரசு மருத்துவர்கள், செவிலியர்கள் தங்கள் பணிமுடித்து தங்கள் வீடுகளுக்கு திரும்புவது அவர்தம் குடும்பத்தினருக்கு ஆபத்தாக முடியும் என்பதால் அவர்கள் பணியிடத்திலேயே தங்கிக் கொள்ள ஏதுவாக தனியிடம் அமைத்துக் கொடுத்து உரிய உணவும் வசதிகளும் செய்துதர தமிழக அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கனிவுடன் கேட்டுக் கொள்கிறது.

**விரைவு பரிசோதனை (Rapid Test) கருவிகள் மூலம் அறியப்படும் முடிவுகள் நம்பகத் தன்மை அற்றதாக ஆகிவிட்ட நிலையில் மாற்றுவழிகளை உடனடியாக கண்டுபிடித்து அதிகப்படியான பரிசோதனைகள் நடத்தப்பட வேண்டும்!**

ஊரடங்கு உத்தரவின் நோக்கம், ஊரடங்கு அமலில் உள்ள காலத்தில் அனைத்து மக்களுக்கும் கொரோனா தொற்று குறித்த பரிசோதனையை மேற்கொண்டுவிட வேண்டும் என்பதுதான். உலக சுகாதார அமைப்பு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கொரோனாவை ஒழிக்க அரசுகள் மேற்கொள்ள வேண்டிய முக்கிய நடவடிக்கைகளில் மருத்துவப் பரிசோதனை மிகவும் இன்றியமையாததாகும் என்று தெரிவித்துள்ள நிலையில், தமிழகம் விரைவு பரிசோதனைக் கருவிகளை நம்பி காத்திருந்து கடைசியில் அது வந்தும் பயனில்லாத நிலைக்கு ஆளாகியிருக்கிறோம். எனவே அரசு கொரோனா தொற்றை கண்டுபிடிக்கும் பரிசோதனைகளை

அதிகப்படுத்துவதற்குத் தேவையான அனைத்துவிதமான உடனடி மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். தமிழகத்தின் மக்கள் தொகையின் விகிதாச்சார அளவுக்கு ஏற்ப கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்ற நிதர்சனத்தை உணர்ந்து நோய் பரிசோதனைக்கான மாற்றுவழிகளை உடனடியாக கண்டு அதை செயல்படுத்த அரசு முனைப்புடன் ஈடுபட வேண்டும்.

**மருத்துவத்துறையில் உள்ள காலியான பணியிடங்களுக்கும், அதிகப்படியான ஊழியர்கள் தேவைப்படும் பணிகளுக்கும் ஒப்பந்த மற்றும் அவுட்சோர்சிங் முறையில் ஆட்களை நியமிக்காமல் நிரந்தர ஊழியர்களை நியமிக்க வேண்டும்!**

இன்று அரசுத்துறைகளில் உள்ள நிரந்தர ஊழியர்கள் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளில் மிகுந்த தைரியத்துடனும் மக்களுக்கு சேவையாற்ற வேண்டும் என்ற எண்ணத்துடனும், கொரோனா தொற்றை தடுக்க வேண்டும் என்ற முனைப்புடனும் செயல்படுகின்றனர். பொறுப்புணர்ந்து பணியாற்றும் இத்தகைய அரசு ஊழியர்களின் பணியிடங்கள் நாளுக்குநாள் அவுட்சோர்சிங் என்ற முறையில் விற்கப்பட்டு வருகின்றன. ஒப்பந்ததாரர்கள் கொடுக்கும் நபர்களும், அவுட்சோர்சிங் முறையில் எடுக்கப்படும் ஆட்களும் பொறுப்புணர்வுடன் மக்களின் நலனில் அக்கறை கொண்டு சேவை மனப்பான்மையுடன் செயல்படுவார்களா என்பது சந்தேகமே.

தற்போது கொரோனா தொற்றின் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில் தமிழக அரசு 2221 சுகாதார ஆய்வாளர்களை நிலை-3 பதவிக்கு தொகுப்பூதியத்தில் வேலைக்கு அமர்த்தியுள்ளதாகவும், அதேபோல நர்சுகள் 1000 பேர், ஆய்வக நுட்புனர்கள் 1500 பேர் மற்றும் மருந்தாளுநர்கள் புறஆதார முறையில் பணிக்கு அமர்த்தியுள்ளதாகவும் தகவல்கள் வருகின்றன. கொரோனா தொற்று பாதிப்புகள் உள்ள இந்த இக்கட்டான சூழ்நிலையில் அவுட்சோர்சிங் முறையிலும் ஒப்பந்த அடிப்படையிலும் அமர்த்தப்படும் ஊழியர்களுக்கு கொரோனா தொற்று பரவினால் அவர்களுக்கு இந்த அரசாங்கம் என்ன செய்யும் என்பதைப் பற்றிய விளக்கமும் இல்லை. போதிய பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்படாத நிலையிலும் கொரோனா தொற்று பாதித்த போதிலும் களத்தில் நின்று மருத்துவப் பணியாற்றும் நிரந்தர அரசு ஊழியர்களின் மக்கள் சேவையும், பொறுப்புணர்வும் ஒப்பந்த மற்றும் அவுட் சோர்சிங் ஊழியர்களுக்கு இருக்காது என்ற யதார்த்தத்தை அரசு உணர்ந்து அவுட் சோர்சிங் ஒப்பந்த அடிப்படையில் ஊழியர்களை நியமிப்பதை உடனடியாக கைவிட்டு நிரந்தர ஊழியர்களை நியமிக்க வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் அன்புடன் கேட்டுக் கொள்கிறது.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84
தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்
எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601

## மக்களின் உயிர் காக்கும் மருத்துவப் பணி செய்பவர்களை அவர்கள் மரணித்த பிறகாவது மரியாதையுடன் நடத்தும் மாண்பை மாநில அரசு மேற்கொள்ள வேண்டும்!

ஒருபுறம் கொரோனா நோய்த் தாக்கத்திலிருந்து மக்களைக் காக்க வேண்டிய கடமையில் ஈடுபட்டிருக்கும் மருத்துவர்களில் ஒரு சிலருக்கு நோய் தொற்று ஏற்படுவதும் அவர்களில் மிகச்சிலர் இறந்துபோவதும் நாம் அவ்வப்போது ஊடகங்களில் வேதனையுடன் பார்த்து வருகிறோம். ஆனால் பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள கொரோனா தொற்றை சரி செய்ய சிசிச்சை அளித்ததன் காரணமாகத்தான் இந்த மருத்துவர்கள் கொரோனா தொற்று ஏற்பட்டு இறந்துபோனார்கள் என்ற உண்மையை உணர மறந்து மருத்துவர்களின் உடல்களை தங்கள் பகுதியில் உள்ள மயானத்தில் புதைக்கவோ, எரிக்கவோ கூடாது என்று அதுபற்றிய விழிப்புணர்வு இல்லாத மக்கள் போராடுவதும், அரசாங்கம் உரிய வகையில் அவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி இறந்துபோன மருத்துவர்களை அரசு மரியாதையுடன் இறுதி அஞ்சலி செலுத்தி அவர்கள் செய்த மருத்துவ சேவையை பாராட்டுவதிலிருந்து விலகி நின்று அத்தகைய மருத்துவர்களின் உடல்களை அடக்கம் செய்யவோ எரியூட்டவோ அவரைச் சார்ந்தவர்கள் அலைகழிக்க விடப்படுவதும் திரும்பத் திரும்ப நடைபெறுவது வேதனையளிக்கும் விஷயங்களாகும்.

மருத்துவர் சைமனின் உடலை அடக்கம் செய்ய போனபோது நிகழ்ந்த அருவெறுக்கத்தக்க நிகழ்வுகளைப் பார்த்து தமிழகமே தலைகுனிந்து நின்றது. இத்தகைய நிகழ்வுகள் இனி தொடராமல் இருக்க வெறும் அவசரச் சட்டங்களால் மட்டும் தடுத்துவிட முடியாது. பொது மக்களுக்கு அது குறித்த அச்ச உணர்வைப் போக்கும் வகையில் விழிப்புணர்வு பிரச்சாரங்கள் ஊடகங்கள் வாயிலாகவும் மற்ற வகைகளிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டும். இனி இப்படிப்பட்ட ஒரு நிகழ்வை தமிழகம் மட்டுமல்ல இந்தியாவும் காண நேராமல் பார்த்துக்கொள்ள வேண்டியது அரசாங்கங்களின் கடமை. அப்படி காணநேர்ந்தால் அதைவிட தேசிய அவமானம் எதுவும் இல்லை.

## மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் தூய்மைப் பணியாளர்களின் கோரிக்கைகளை அரசு உடனடியாக நிறைவேற்ற இதுவே தருணம்!

மருத்துவர்கள் தங்களுக்கு மீறிய பங்களிப்பை இந்த நோயை வெல்வதற்காக வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். கொரோனா தொற்று குறைப்பு நடவடிக்கைகளுக்காக மருத்துவர்கள் தொடர்ந்து மேற்கொண்டு வரும் சீரிய தொண்டினை இந்த உலகமே பாராட்டும் நிலையில், சென்ற வருடங்களில் அவர்கள் தங்கள் ஊதிய உயர்வுக்காக போராடியபோது அதை கண்டுகொள்ளாமல் விட்டுவிட்டதோடு மட்டுமல்லாமல் அவர்களை வேறு மாவட்டங்களுக்கு பணி மாறுதல் செய்து மன உளைச்சலுக்கு ஆளாக்கியதையும் இப்போது அரசாங்கம் நினைவில் கொள்ள வேண்டும். அவர்கள் மீதான வழக்குகள், பணியிட மாற்றங்கள் மற்றும் துறை ரீதியான நடவடிக்கைகள்

அனைத்தையும் தமிழ்நாடு அரசாங்கம் கைவிட்டு விட்டது என்ற அறிவிப்பு வரும்பட்சத்தில் அவர்களை மேலும் ஊக்கப்படுத்துவதாக அமையும். அவர்களின் பணி சிறப்பானது என தமிழக அரசு பாராட்டினால் மட்டும் பயனில்லை. தங்களுக்கு போதிய பாதுகாப்பு உடைகளும் உபகரணங்களும் வழங்கப்படுவதில் குறைகள் உள்ளதை அவர்கள் தொடர்ந்து சுட்டிக்காட்டியும் அரசாங்கம் அதை கண்டுகொள்ளாத நிலையில் அவர்கள் போராட்டக்களம் போகாமல் தங்கள் கண்டனத்தை ஒரு கறுப்பு பேட்ஜ் அணிந்து கொண்டு மக்கள் சேவையை தொடர்ந்து கொண்டிருக்கும் இத்தருணத்திலாவது அவர்களின் ஊதிய உயர்வு, பணி உயர்வு, பணியிட மாற்றம் போன்ற கோரிக்கைகளின் பேரில் அரசு நல்லதொரு முடிவெடுக்க வேண்டும். அதேபோல் எம்.ஆர்.பி. செவிலியர்கள்களை பணி நிரந்தம் செய்வதிலும், காண்டிராக்ட் ஊழியர்களாக இருக்கும் தூய்மைப் பணியாளர்களை நிரந்தர அரசு ஊழியர்களாக அரசு உடனடியாக அறிவிக்க விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வேண்டுகோள் விடுக்கிறது.

**சிறப்பூதியம் பெறத் தகுதியானவர்கள் தான் கொரோவை எதிர்த்திடும் போர்முனையில் நிற்கிறார்கள்!**

கொரோனா தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் மருத்துவர்கள் செவிலியர்கள் காவல்துறையினர் உள்ளிட்ட அனைத்து அரசு ஊழியர்களும், மிகசிறப்பாக செயல்படுகின்றனர் என தமிழக முதல்வரே சான்றளித்த பின்னர், அவர்களுக்கான சிறப்பூதியத்தில் பாரபட்சம் காட்டுவது அவர்களின் அர்ப்பணிப்பான கடமையுணர்வை கொச்சைப்படுத்துவதாக அமைந்துவிடும். எனவே மருத்துவர்களுக்கு ஒரு மாதம் சிறப்பூதியத்தை தமிழக முதல்வர் அறிவித்தது போல் செவிலியர்கள், ஆய்வக தொழில்நுட்பனர்கள், மருத்துவ ஊழியர்கள் உள்ளிட்ட கொரோனா தடுப்பு நடவடிக்கைகளில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ள அனைத்துத்துறை ஊழியர்களுக்கும் வழங்கி அவர்களின் பணியையும் கண்துஞ்சா சேவையையும் ஊக்கப்படுத்த வேண்டும் என்ற தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக் கொள்கிறது.

**கொரோனா தொற்று தடுப்பு காலத்திலும் கூட அரசு ஊழியர்கள் மீதான பழி வாங்கும் நடவடிக்கையை அரசு தொடரும் போக்கு துரதிருஷ்டவசமானது!**

கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கைகளில் முன் வரிசையில் நிற்கும் அரசு ஊழியர்கள் மன உளைச்சல் ஏற்படுத்தும் வகையிலும், அவர்கள் அச்சமுறும் வகையிலும் தமிழக அரசு கடந்த இரண்டு மாதங்களாக, பணி ஓய்வு பெறும் அரசு ஊழியர்களில், குறிப்பிட்ட சில ஊழியர்களை அவர்கள் ஜாக்டோ ஜியோ கூட்டமைப்பு நடத்திய மாநிலந்தழுவிய வேலை நிறுத்தத்தில் பங்கேற்றவர்கள் அல்லது முன்னணியில் நின்றவர்கள் என்ற காரணத்திற்காக பணி ஓய்வு

பெறவிடாமல், பணிக்காலத்தின் கடைசி நாளில் தற்காலிகப் பணி நீக்கம் செய்து உத்தரவிட்டு வருகிறது. இது ஒட்டுமொத்த தமிழக அரசு ஊழியர்களையும் குறிப்பாக கொரோனா நோய் தொற்றுத் தடுப்புப் பணியில் ஈடுபட்டிருக்கும் அரசு ஊழியர்கள் அனைவரையும் அதிர்ச்சிக்கும் வேதனைக்கும் உள்ளாக்கியுள்ளது. அனைத்துத் தரப்பு அரசு ஊழியர்களுக்காகவும், அரசு தமிழக அரசு ஊழியர்களுக்கு கிடைக்க வேண்டிய நியாயமான ஊதிய மாற்றத்தை ஏற்படுத்தாமல் காலதாமதம் செய்ததாலும் வேறுவழியின்றி போராட்ட களத்திற்கு போக வேண்டிய சூழ்நிலைக்கு ஆட்பட்டு, அந்த வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னின்று நடத்தியவர்களை, எதிரிகளைப் போல, அரசுக்கு எதிரானவர்கள் போல பணிக்காலத்தின் கடைசி நாளில் தற்காலிக பணி நீக்கம் செய்து ஓய்வு பெற விடாமல் தடுத்திடும் செயலானது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதற்கு ஒப்பதானதாகும்.

கொரோனா தடுப்பு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக இந்தியா முழுவதிலுமுள்ள சிறைச்சாலைகளில் உள்ள பெரிய ரௌடிகள், ஊழல் வழக்கில் சிறைசென்றோர் முதல் சிறு குற்றம் செய்து தண்டனை பெற்ற குற்றவாளிகள் வரை விடுதலை செய்யப்பட்டிருக்கும் நிலையில், தங்கள் உரிமைகளுக்காக போராடிய, அரசின் பாரபட்சமான அணுகுமுறையை எதிர்த்துக் கேட்ட அரசு ஊழியர்களில் போராட்டக் களத்தில் முன்நின்று சிறை சென்ற, துறை நடவடிக்கைளுக்கு உட்படுத்தப்பட்ட ஜாக்டோ ஜியோ கூட்டமைப்பின் முன்னணி ஊழியர்களை நிர்வாகிகளை அவர்களின் பணி இறுதி நாளில் தற்காலிகப் பணி நீக்கம் செய்வதும், ஓய்வூதியம் பெறாமல் தடுப்பதும் ஒரு மக்கள் நல அரசுக்கு அணி சேர்ப்பதாக அமையாது. எனவே, கடந்த இரண்டு மாதங்களாக பணி ஓய்வு பெறும் நாளில், தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ள ஊழியர்களில் ஜாக்டோ ஜியோ வேலை நிறுத்தப் போராட்டத்தில் கலந்து கொண்டு அதற்காக துறை நடவடிக்கைகளுக்கு உள்ளான ஊழியர்களை பணி ஓய்வு செய்ய அனுமதித்து ஏற்கெனவே பிறப்பித்துள்ள பணி நிறுத்த உத்தரவுகளை தமிழக அரசு திரும்பப் பெற வேண்டும்.

**சார்பதிவாளர் அலுவலகங்களில் ஆவணப்பதிவுகளைவிட கொரோனா தொற்றுப் பதிவுகள்தான் இனி வேகமாக நடக்கும்!**

கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கைகளுக்கான ஊரடங்கில் அத்தியாவசியத் துறைகளைத் தவிர மற்ற துறைகள் அனைத்தும் மூடப்பட்டிருக்கும் நிலையில் ஊரே முடங்கிக் கிடக்கும் நிலையில் 20.04.2020 முதல் சார்பதிவாளர் அலுவலகங்கள் 33 சதவீத ஊழியர்களுடன் இயங்கும் என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது பலவிதமான சந்தேகங்களை எழுப்பியுள்ளது. சார்பதிவாளர் அலுவலகத்தில் ஒரு ஆவணத்தை பதிவு செய்ய வேண்டுமானால் முத்திரைத்தாள் விற்பனையாளர், ஆவண எழுத்தர், தட்டச்சு செய்பவர், எழுதிக் கொடுப்பவர் (சொத்தை விற்பவர்), எழுதி வாங்குபவர் (சொத்தை வாங்குபவர்) சாட்சிகள் என சுமார் 10 நபர்களும்

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
## Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84

**தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்**

எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601


சார்பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரியும் சார்பதிவாளர் உள்ளிட்ட ஐந்து ஊழியர்கள் என கிட்டதட்ட ஒரு ஆவண பதிவுக்காக 15 பேர் வரை சம்பந்தப்பட வேண்டியுள்ளது. கொரோனா தொற்று இந்தியாவில் அங்கொன்றும் இங்கொன்றுமாக பரவ ஆரம்பித்த நேரத்தில் பெரும்பாலான அலுவலகங்கள் வெளியிட்ட முதல் உத்தரவு அவர்களின் ஊழியர்கள் யாரும் பயோமெட்ரிக் இயந்திரத்தில கைரேகை வைக்க வேண்டாம் என்பதுதான். அதன்மூலம் கொரோனா நோய்த்தொற்று வேகமாக பரவும் என்ற கருத்துக்களின் பேரில் அவ்வாறு செய்யப்பட்டது. ஆனால் பல பேர்கள் பயோமெட்ரிக் முறையில் கைரேகை வைக்க வேண்டியுள்ளதால் அது எளிதாக கொரோனா தொற்றை பரப்பிவிடும் அபாயம் உள்ளது.

பெரும்பாலான சார்பதிவாளர் அலுவலகங்களில் ஒரு சார்பதிவாளர், ஒரு உதவியாளர், ஒரு இளநிலை உதவியாளர் என கட்டமைக்கப்பட்டுள்ள நிலையில் 33 சதவீதப் பணியாளர்களுடன் இயங்க வேண்டும் என வலியுறுத்தியிருப்பது நடைமுறை சாத்தியமில்லாத செயலாகும். இடநெருக்கடியான காத்திருப்பு அறைகள் ஆவண பதிவுக்கு பயோமெட்ரிக் முறைகள் என்று கொரோனோவை எளிதில் பரப்பக்கூடிய அதிசாத்தியக்கூறுகள் உள்ள சார்பதிவாளர் அலுவலகத்தில் கொரோனா தொற்று பயத்தை தாண்டி யாராவது ஆவண பதிவுக்காக வருவார்களா? என்பது கேள்விக்குரிய இந்த நிலையில் அவசர கதியில் 33 சதவீத ஊழியர்களுடன் அலுவலகங்கள் திறக்கப்பட வேண்டிய அவசியம் என்ன? பல துறைகளை திறக்காமல் விட்டுவிட்டு பத்திரப் பதிவுத்துறையை மட்டும் திறந்திருப்பது பலவித சந்தேகங்களை மக்கள் மனதில் தோற்றுவித்துள்ளது.

சார்பதிவாளர் அலுவலகத்தில் உள்ள பயோமெட்ரிக் கருவியில் சம்பந்தப்பட்ட அனைவரின் கைரேகைகளையும் பதிவு செய்யவேண்டிய அவசியம் உள்ளது. இது கொரோனா தொற்று வேகமாக பரவலுக்கு காரணமாக அமைந்துவிடக்கூடிய வாய்ப்புகள் அதிகம் உள்ளதால் சார்பதிவகங்களை ஊரடங்கு முடியும் வரை திறக்காமல் வைத்திருப்பதுவே வீட்டுக்கும் நாட்டுக்கும் நலம் பயக்கும் என்பதை உணர்ந்து அதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டுமென மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கனிவுடன் கேட்டுக் கொள்கிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள.

**(மு.அன்பரசு)**
மாநிலத் தலைவர்

**(ஆ.செல்வம்)**
பொதுச் செயலாளர்